

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மறைந்த மாவட்ட பிரதிநிதி இலவம்பேடு; ஆ.பாளையம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாளை ஒட்டி அன்னாரின் திருஉருவப்படத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினரும், கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் பூவிருந்தமல்லி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர்;. உடன் நா. செல்வசேகரன், ஜி.ரவிகுமார், மீ.வி.கோதண்டன், மீஞ்சூர்.கே.சுப்பிரமணி, அத்திபட்டு ஜி.ரவி, கா.சு.ஜெகதீசன், நில்சன் நிலவழகன், வாயலுர். கோபி, சகாதேவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி நேரு பஜாரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட தனியார் ஜவுளிக் கடையை முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு, மீட்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். உடன் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மாநகர தி.மு.க. பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி. நாராயண பிரசாத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### "கல்வி நிலையத்திலும் த.வெ.க. ஆணவ அரசியல்"

# கட்டணம் கேட்ட பள்ளி நிர்வாகத்திடம் ரகளை செய்ததாக நிர்வாகி மீது புகார்!

## பள்ளி வாசலில் காரை குறுக்கே நிறுத்தி அராஜகம் – பொதுமக்கள் அச்சம்!

திருவள்ளூர், ஜூன் 29-

திருவள்ளூர் அருகே காஞ்சிபாடி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளியில் கல்விக் கட்டண விவகாரத்தை முன்னிட்டு த.வெ.க. நிர்வாகி ஒருவர் அராஜகத்தில் ஈடுபட்டதாக கூறப்படும் சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பள்ளியில் பயிலும் தனது உறவினர் மாணவரின் கல்விக் கட்டணமாக சுமார் ரூ.13 ஆயிரம் நிலுவையில் இருந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில், மாணவருக்கு மாற்றுச் சான்றிதழ் (டி.சி.) வழங்க வேண்டும் என வலியுறுத்தி த.வெ.க. நிர்வாகியான ராஜேஷ் என்பவர் பள்ளிக்குச் சென்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்போது, கல்விக் கட்டணத் தொகையை செலுத்த முடியாது என்றும், உடனடியாக மாற்றுச் சான்றிதழை வழங்க வேண்டும் என்றும் பள்ளி நிர்வாகத்திடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பள்ளி வளாகம் மற்றும் அதன் நுழைவாயில் பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியதாகவும், பள்ளி நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்களிடம் கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் புகார் எழுந்துள்ளது.

இதுமட்டுமின்றி, பள்ளி வாசலின் முன்பாக தனது காரை குறுக்கே நிறுத்தி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிரமப்படும் படி செயல்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் பள்ளிக்கு வந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கடும் அவதிக்குள்ளானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்வி நிலையங்கள் என்பது மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்கும் புனிதமான இடங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி பள்ளி நிர்வாகங்களை மிரட்டும் போக்கு அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். கல்வி நிறுவனங்களுக்குள்ளேயே இத்தகைய அழுத்த அரசியல் நடைபெறுவதாக எழும் குற்றச்சாட்டு கள் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த சில மாதங்களாக திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் த.வெ.க. நிர்வாகிகள் தொடர்பான சர்ச்சைகள், மிரட்டல் புகார்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோக குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பதாக எதிர்க் கட்சியினர் சுட்டிக்காட்டுகின்றனர். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் மீண்டும் நிகழ்வதால் பொதுமக்களிடையே அச்ச உணர்வு அதிகரித்து வருவதாகவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

### சைதை மேற்கு பகுதி – இளைஞர் அணி அமைப்பாளர்

# ஜிம் க.பிரபு தந்தையார் திருவுருவப்படம்! மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

## எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை! துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.ஜோயல், எம்.வி.பிரபாகர்ராஜா, இரா.துரைராஜ் பங்கேற்பு!

சென்னை, ஜூன்.29-

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி இளைஞர் அணியின் பகுதி அமைப்பாளர் ஜிம் க.பிரபு, அவர்களின் தந்தையார் வி.கண்ணன் நாயக்கர் அவர்கள் 14.06.2026 அன்று இயற்கை எய்தினார்.

அதனைத் தொடர்ந்து 28.06.2026 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில், ஜாபர்கான் பேட்டை, வீதி மாரியம்மன் கோவில் 2வது தெரு, எண்.4/5-ல் உள்ள எங்கள் இல்லத்தில் 28.06.2026 அன்று அன்னாரது படத்திறப்பு நடைபெற்றது.

சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பங்கேற்று, அன்னாரின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

மேலும் இந்நிகழ்விற்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டல குழு தலைவருமான இரா.துரைராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் எஸ். ஜோயல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், சைதை மா.அன்பரசன், களக்காடிஎல்லப்பன், மின்னல் கந்தப்பன், மாநில கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை துணை செயலாளர் எம். எஸ்.ஹரிபாபு, பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன், கவிதாகௌதமன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், அட் கோகமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், சைதை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கொடிபாலா உள்ளிட்ட மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டகழக நிர்வாகிகள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

# ஆவடி நேரு பஜாரில் தீ விபத்து -ஜவுளிக் கடை பாதிப்பு!

## முன்னாள் அமைச்சர் சா.மு.நாசர் நேரில் பார்வையிட்டு மீட்புப் பணிகளை கேட்டறிந்தார்!

திருவள்ளூர், ஜூன் 29-

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நேரு பஜார் பகுதியில் அமைந்துள்ள தனியார் ஜவுளிக் கடையில் எதிர்பாராத விதமாக தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் கடையில் இருந்த ஜவுளிப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் எரிந்து நாசமாகின. இந்த விபத்தில் சுமார் ரூ.1 கோடி மதிப்பிலான பொருட்கள் சேதமடைந்ததாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்ததும் முன்னாள் அமைச்சரும், திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு. நாசர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீ விபத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை நேரில் பார்வையிட்டார். மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பது குறித்து கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட கடை உரிமையாளருக்கும், ஊழியர்களுக்கும் ஆறுதல் தெரிவித்த அவர், தேவையான அனைத்து உதவிகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு நிலைமையை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது ஆவடி மாநகர மேயர் உதயகுமார், ஆவடி மாநகர திமுக பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி கழகச் செயலாளர்கள் ஜி. ராஜேந்திரன், ஜி. நாராயண பிரசாத், ஆவடி பாலா, சத்யா கோ. ரவி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர். தீயணைப்புத் துறையினர் தீயை முழுமையாகக் கட்டுப்படுத்தி, சேத விவரங்களை கணக்கிடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டனர்.

### என். பாட்ஷா தலைமையில் – என்.எம்.இஸ்மாயில், ஏ.அப்துல் பஷீர் முன்னிலையில்

# மாதவரம் தொகுதி எஸ்டிபிஐ கட்சி சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு!

## புழல் எம். நாராயணன், பி.எஸ். சந்துரு, வி.ஆர். குப்பன் பங்கேற்பு!

மாதவரம், ஜூன்.29-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி எஸ் டி பி ஐ கட்சியின் 18 ஆம் ஆண்டு துவக்க தினத்தை முன்னிட்டு மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டத்திற்குட்பட்ட காவாங்கரை பகுதியில் நீர் மோர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி 23 வது வட்டம் காவாங்கரை பேருந்து நிறுத்தம் அருகே எஸ் பி பி ஐ கட்சியின் சார்பில் சுட்டெரிக்கும் வெயிலில் பொதுமக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தல் வட்ட தலைவர் பாஷா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொதுச் செயலாளர் வழக்கறிஞர் என் எம் இஸ்மாயில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பஷீர், வடசென்னை மேற்கு மாவட்ட செயலாளர் திரு ரியாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேருந்து நிறுத்தம் அருகே அமைக்கப்பட்டு இருந்த தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர்மோர் சர்பத் மற்றும் தர்பூசணி உள்ளிட்ட பழங்களை நிர்வாகிகள் வழங்கி துவக்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், 23 வது வட்டச் செயலாளர் பி. எஸ். சந்துரு,23 அ வட்டச் செயலாளர் வி ஆர் குப்பன்,எஸ்டிபிஐ கட்சியின் மாதவரம் சட்டமன்ற தொகுதி தலைவர் ஷேக் முகமது அலி தொகுதி பொருளாளர் இம்தியாஸ், துணைத் தலைவர் முகமது சிக்கந்தர், வடசென்னை மேற்கு மாவட்ட பொருளாளர் யாசின், சுந்தரம்,ஜமீன், ஹோட்டல் பாஷா, ஷேக் அப்துல்லா, 23 வது வட்ட நிர்வாகிகள் பயாஸ், சுல்தான், இம்ரான். கபீர், மைதீன், நவீன், ஆக்கில், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

இன்று திறக்கப்பட்ட இந்த நீர் மோர் பந்தலில் வழங்கப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் பழங்களின் மூலம் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்தனர்.

### ஈரோடு மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளர்

# ஆர்.செந்தில்குமார் மறைவு!

## சு.முத்துசாமி – கே.இ.பிரகாஷ் நேரில் அஞ்சலி!

ஈரோடு, ஜூன். 29-

ஈரோடு மத்திய மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளரும், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினருமான ஆர்.செந்தில்குமார் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



தகவல் அறிந்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே. இ.பிரகாஷ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்கள்.

**உதயநிதி ஸ்டாலின் இரங்கல் செய்தி!**

அன்னாரின் மறைவு செய்தி அறிந்த சட்டமன்ற எதிர் கட்சி தலைவரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் அறிக்கையில் ஈரோடு மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை அமைப்பாளரும், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினருமான ஆர்.செந்தில்குமார் காலமானார் என்பதையறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

2018 ம் ஆண்டு நடைபெற்ற கழகத்தின் மண்டல மாநாட்டிற்கு தனது கடின உழைப்பை தந்தவர். பெருந்துறை ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினராக திறம்பட பணியாற்றியவர். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். அவரை இழந்து வாடும் குடும்பத்தாருக்கும், கழகத்தினருக்கும் எனது ஆறுதல்களை தெரிவித்து கொள்கிறேன் என கூறியுள்ளார்.

### நாகர்கோவில் மாநகர கிழக்குப் பகுதி

# 25வது வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் ஆலோசனைகள் வழங்கினார்!

நாகர்கோவில், ஜூன். 29-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி, 25 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 25.06.2026, வியாழன் அன்று மாலை 6.00 மணியளவில் வடிவீஸ்வரம், தளவாய் தெரு சந்திப்பில் வைத்து நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி செயலாளர் த.ஜீவா தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் என்.பி.துரை முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் வட்ட அவைத் தலைவர் நாஞ்சில் ராஜ், வட்ட கழக நிர்வாகிகள் சத்திய சாய்பாபு, குமார், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பூ.சிதம்பரம், சுப்பையா பிள்ளை, பாலா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம்: 1**

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி கட்சி வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி கழகம் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானம்: 2**

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களபணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம்: 3**

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழக தலைவர் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணிகளை செவ்வனே நிறைவேற்றி கழகம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.




தென்காசி தெற்கு மாவட்டம் சுந்தரபாண்டிபுரம் மிஸ்பா மழலையர் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வரை படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு நோட் புத்தகம் வழங்கும் நிகழ்வு பள்ளி நிர்வாகி சிமியோன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் பங்கேற்று வழங்கினார். நிகழ்வில் மாவட்ட பிரதிநிதிகள் ஸ்டீபன் சத்யராஜ், அன்பழகன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஹரி கிருஷ்ணன், அசோக் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அல்லி டெய்சிபாய், சுப்புலட்சுமி, மதுபாலா, இசக்கியம்மாள், அன்னாள் சாந்தி உள்பட ஆசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர கிழக்கு பகுதி, 25 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது மாநகர கிழக்கு பகுதி செயலாளர் த.ஜீவா தலைமையில், மாநகர தெற்கு பகுதி செயலாளர் என்.பி.துரை முன்னிலையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாஞ்சில் ராஜ், சத்திய சாய்பாபு, குமார், பூ.சிதம்பரம், சுப்பையா பிள்ளை, பாலா உட்பட பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.